மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தண்டியிலே இருக்கிற பள்ளியின் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தால் அதை ஏற்று, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையைப் பெற்று, சத்துணவு மையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.*

திரு. கே.பி. கந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

108—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***36846—திரு. இரா. துரைக்கண்ணு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவங்கும் கருத்துரு

ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.*

திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை நமதே நாற்பதும் நமதே என்று வீர முழக்கமிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) சிங்க நடை போட்டு வெற்றி கண்ட வீராங்கனையே, இன்றைக்கு தமிழகத்தை இந்தியாவிலேயே அனைத்திலும் முன்னோடி மாநிலமாக்கி வரலாறு படைத்திட்ட வரலாற்று நாயகியே! தங்கத் தாரகையே, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் குல தெய்வமே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா, தங்களின் மலர்ப் பாதம் வணங்குகின்றேன்.*

வறுமைப் பசியைப் போக்க குடும்பம் ஒன்றுக்கு மாதம் 20 கிலோ விலையில்லா அரிசி, தாய்மார்களுக்கு கிரைண்டர், மிக்சி, ஃபேன், கல்விப் பசியைப் போக்கி கல்வி கல்லாதவர்களே இல்லை என்ற நிலையை உருவாக்கிட பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி, பாடப் புத்தகங்கள், உபகரணங்கள், விலையில்லா 4 செட் சீருடைகள் மற்றும் காலணிகள் அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவ மாணவிகளுக்கும் கல்வி உதவித் தொகையாக ரூ.5 ஆயிரம், 11 ஆம் வகுப்பு முதல் கல்லூரி வரை பயிலும் மாணவ-மாணவிகளுக்கு விலையில்லா லேப்—டாப், படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக 50 ஆயிரம் ரூபாயும், தாலிக்கு அரை பவுன் தங்கம், வீடு தேடி மருத்துவ வசதி, ஏழைகளுக்கு விலையில்லா பசுமை வீடுகள், இப்படி அரிய பல உன்னதத் திட்டங்களைத் தமிழகத்தில் நிறைவேற்றி, ஒப்பற்ற பொற்கால ஆட்சியை நடத்தி வரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா, தங்கள் பொற்பாதம் வணங்குகின்றேன்.

முற்பகல் 10-30

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், பெரும் தலைவர் காமராஜர் ஆகியோர்களின் கனவை நினைவாக்கி, இன்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் கல்வித் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, திறம்பட நிறைவேற்றி வருகின்றார்கள். அன்று எம்.ஜி.ஆர். அவர்கள்,

2014 ஜூலை 11]

"கல்லாத பேரையெல்லாம் கல்வி பயில செய்து,
கல்லாத பேரையெல்லாம் கல்வி பயில செய்து
காண்பதில்தான் இன்பம் என் தோழா!
காண்பதில்தான் இன்பம் என் தோழா
உனை ஈன்ற தாய் நாடு உயர்வதிலே
இன்பம் உண்டாகும் என்றே சொல் என் தோழா!
(மேசையைத் தட்டும் ஒலி)
இன்பம் உண்டாகும் என்றே சொல் என் தோழா!"

என்று பாடினார்.

கல்வி கல்லாதவர்கள் யாரும் இல்லை என்ற உன்னத நிலையை இதய தெய்வம் அம்மா அவர்கள் தமிழகத்தில் இன்றைக்கு ஏற்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தன் தாய் நாட்டை உலகிலேயே உன்னத நாடாக இன்றைக்கு உயர்த்தியுள்ளார்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்றைக்கு தமிழகத்தில் கல்விப் புரட்சியை ஏற்படுத்தி, மற்ற மாநிலங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தமிழகத்தின் பொற்கால ஆட்சியைப் பார்த்து, பின்பற்றி வருகிறார்கள். கல்விக் காவல் தெய்வம், சரஸ்வதியாக விளங்குகின்ற தமிழக மக்களின் கண்கண்ட தெய்வம், எங்கள் குல தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா!—தாங்கள் பாபநாசம் தொகுதியைத் தத்து எடுத்துக்கொண்டு அங்கு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தாயுள்ளத்தோடு அமைத்துத் தந்து, பாபநாசம் தொகுதி, கல்வியில் உயர் நிலையை அடைய மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி வேண்டுகின்றேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான கருணைப் பார்வைக்கு எடுத்துச்சென்று எனது கோரிக்கையை நிறைவேற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் 499 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. அரசு தொழில்நுட்பக் கல்லூரிகள் 41 இருக்கின்றன. அரசு உதவிபெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 34 இருக்கின்றன. Self-financing

polytechnics—சுய நிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 404 உள்ளன. Film Institute, Labour Institute and Hotel Management போன்ற டிப்ளமோ பயிற்சி வழங்கும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 20 உள்ளன. ஆகமொத்தம், 499 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய பின்தங்கிய மாணவர்கள் தொழில் கல்வி பெறவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் ஆட்சி அமைந்த இரண்டே ஆண்டுகளில் 11 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளை உருவாக்கி தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தாங்கள் சார்ந்திருக்கிற பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இங்கே வலியுறுத்தினார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் கல்விப் புரட்சியை எவ்வாறு ஏற்படுத்தி வருகிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற தஞ்சாவூர் மாவட்டத்தில் இரண்டு அரசு நிதியுதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரிகள்—பட்டுக்கோட்டையில் ஒன்றும், வல்லத்தில் ஒன்றும்— செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன, சுய நிதி—self-financing polytechnic கல்லூரிகள் என 12 கல்லூரிகள் இருக்கின்றன. ஆக, 16 பாலிடெக்னிக் கல்லூரிகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் இருக்கின்றன. அந்த பாலிடெக்னிக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கை 5,880 இடங்கள் ஆகும். ஆனால், இந்த ஆண்டு 3,704 மாணவர்கள்தான் அங்கே சேர்ந்திருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கே 2,176 இடங்கள் காலியாக இருக்கின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிற காரணத்தினால், இந்த ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, அரசு அதுகுறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.*

திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பாபநாசம் தொகுதியில் எந்தவிதமான அரசுக் கல்லூரிகளும் இல்லை. பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி இல்லையென்றாலும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியையாவது அமைத்துத்தந்து, என்னுடைய பாபநாசம் தொகுதிக்கு ஒரு பெருமையை ஏற்படுத்தித் தரவேண்டும். இந்தக் கோரிக்கையை கருணை வடிவமாக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச்சென்று, நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தஞ்சாவூர் மாவட்டத்திற்கென ஒரு தனி பொறியியல் கல்லூரி செங்குப்பட்டியில் தொடங்குவதற்கு ஆணை வழங்கி, அதற்கான கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்லாமல், பேராவூரணி சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்க ஆணை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேருவதில் மாணவர்களிடம் ஆர்வம் அதிகமாக இருக்கிறது என்பது உண்மை. கல்லூரி மாணவர்கள், பேராசிரியர் பெருமக்கள், கல்வியாளர்கள் அனைவரும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அதிகமாக ஆரம்பிக்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலேதான், தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரையில் இல்லாத அளவிற்கு தமிழகத்திலே ஆட்சி அமைந்த இரண்டே ஆண்டுகளில், 37 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கி மாணவர்கள் சேர்க்கை நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியையாவது தொடங்க வேண்டுமென்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தி வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று அதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்*

அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி மற்றும் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் கிடையாது. கீழப்பாவூர் ஒன்றியத்தில் உள்ள 14 ஊராட்சிகள், தென்காசி ஒன்றியத்திற்குட்பட்ட 8 ஊராட்சிகள் மற்றும் மற்றும் ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள 15 ஊராட்சிகள் ஆகிய பகுதிகளில் பயின்றுவரும் மாணவர்கள் திருநெல்வேலி, சங்கரன்கோவில் சென்று பயின்று வருகின்றார்கள்.*

தமிழகத்திலுள்ள அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில், தென்கோடி மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரியில் 3 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளே உள்ளன. அதுவும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரேயொரு அரசு உதவிபெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி மட்டுமே உள்ளது. எனவே, பள்ளிப் படிப்பிற்கு பின்னர், கிராமப்புற மாணவ, மாணவிகள் தங்கள் கல்வியினை இடையில் நிறுத்திவிடாமல், தொடர்ந்து உயர் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், ஏழையெளிய, நடுத்தர கிராமப்புற மாணவ, மாணவியர்கள் அதிகம் வசிக்கும் நெல்லை மாவட்டத்திலுள்ள தென்காசி தொகுதிக்குட்பட்ட ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலையில் ஓர் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியைத் துவக்கிட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், அது மாநகராட்சிப் பகுதியாக இருந்தால், 2 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியாக இருந்தால், 3 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. தாங்கள் சொல்லுகின்ற கிராமம் போன்ற பகுதியாக இருந்தால், 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. கட்டுமானச் செலவுக்கு மட்டுமே 37 கோடி ரூபாய் செலவாகிறது.*

2014 ஜூலை 11]

தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு 50 இலட்சம் ரூபாய் செலவாகிறது. கட்டடங்கள் கட்டுவதற்கு 37 கோடி ரூபாய் செலவாகிறது. Hostel வசதி, compound wall, auditorium இதுபோன்ற வசதிகள் ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதோடு, ஆண்டொன்றுக்கு 61 ஆசிரியர்கள் நியமிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. தாங்கள் சொல்கிற பகுதியில் கல்லூரிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன என்ற கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறீர்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரியும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி போன்ற இந்த மூன்று மாவட்டங்களையும் சேர்த்து மொத்தம் 65 பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், இந்த மூன்று மாவட்டங்களிலும் 56 கல்லூரிகள் இருக்கின்றன. அதில் அரசுக் கல்லூரிகளாக மூன்று கல்லூரிகளும், அரசு உதவிபெறும் கல்லூரிகளாக 2 கல்லூரிகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சொல்கிற கருத்தைப் பார்க்கும்போது, மற்றப் பகுதிகளைவிட இந்த மூன்று மாவட்டங்களில் கல்லூரிகள் சற்று குறைவாகத்தான் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

109—

நியாய விலைக் கடை

***13956—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், சித்தேரியிலுள்ள பகுதி நேர நியாய விலைக் கடையை முழு நேரக் கடையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?